28th March 1969]

I would like to say is that many of the merchants are very poor people and are unable to repay the money in one lump sum. Will the Government kindly consider the question of allowing them to pay back the amount due to the Government in easy instalments instead of requiring them to pay in one lump sum ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வியாபாரிகளிடமிருந்து 50 ஆயிரம் ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் தரகர்களை விட்டு அவர்கள் ஸ்டேட் பாங்கில் சலானில் பணம் கட்டியதாக பொய் ரசீது கொண்டுபோய்க் கொடுத்து நெல் பெற்றிருப்பது. பணம் முதலாளி கொடுத்தனுப்பினாரா, தரகர் எடுத்துக்கொண்டாரா என்ற விவரம் இல்லை. உண்மையான குற்றவாளி முதலாளி அல்லது தரகராக இருக்கலாம். அங்கே பணியாற்றுகிறவர்கள் எல்லாம் உடந்தையாக இருக்கலாம். பணம் யார் யார் கொடுத்திருக்கிறார்கள் என்று விசாரணையில் தெரிய வரும்போது பணம் திரும்பக் கொடுக்கும் வாய்ப்பும் வரும். அந்த நெல்லை அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதற்கான தொகையை அவர்களிடம் வசூல் செய்வதில் தவறு இருக்க முடியாது என்று கருதுகிறேன். உதவியாளரிடம் இருந்து ரூபாய் 25 ஆயிரம் பெருமான பொருள்கள், நகைகள், டிரான்சிஸ்டர், அம்பாசிடர் கார் போன்றவைகள் எல்லாம் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

திரு. டி. சந்தோஷம்: வியாபாரிகளிடமிருந்து பணத்தைப் பெறுவது தவறில்லை. திரும்பச் செலுத்தும்படி கேட்கும்போது உடனடியாக மொத்தமாகச் செலுத்த வசதியில்லாத நிலையில் இருக்கிறார்கள். ஆகையால் எளிதான தவணை முறையில் செலுத்துவதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதில் கருணை காட்ட இயலாது. மோசடியில் ஈடுபட்டவர்களிடம் தவணை முறையில் வசூல் செய்வது என்றால் பணம் வசூல் செய்ய முடியாத நிலைமை ஏற்படலாம். சரக்கு அனுப்புகிற பொழுது அவர்களுக்கும் இந்த விவரம் தெரியாமல் நடந்திருக்கும் என்று சொல்ல முடியாது. இது கூட்டு சதியாக நடந்திருப்பதால், எல்லோர் மீதும் மொத்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கிறது.

Dealers in Sugar in Chinnamanur

* 268 *Q*.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether about the 22nd of February 1969, the Sub-Collector, Periyakulam, suddenly and without any previous notice cancelled the licences of all the authorised dealers of sugar in Chinnamanur, Madurai district, and ordered them to surrender the entire stock with them in 48 hours ;

(*b*) whether the dealers obtained a stay-order from the District Revenue Officer ;

(*c*) whether even after the said stay-order was brought to his notice, the Sub-Collector threatened and forcibly seized the stock of sugar in the possession of the dealers ; and

(*d*) if so, the details thereof ;

சின்னமனூர் சர்க்கரை வணிகர்கள்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) பெரியகுளம் மாவட்ட ஆட்சி துணைத்தலைவர் 1969 பிப்ரவரித் திங்கள் 22-ம் நாளன்று மதுரை மாவட்ட சின்னமனூரில் சர்க்கரை விற்க அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களின் உரிமங்களை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்து, அடுத்த 48 மணி நேரத்திற்குள்ளாக மொத்த சேமிப்பையும் அவர்கள் ஒப்படைக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தாரா ?

(இ) மாவட்ட வருவாய் அதிகாரிகளிடமிருந்து தடுப்பு ஆணை ஒன்றை அவ்வணிகர்கள் பெற்றுர்களா ?

(உ) மேற்கூறிய தடுப்பு ஆணை துணைத்தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டும் கூட வணிகர்கள் சேமித்திருந்த சர்க்கரையை அச்சுறுத்தி பலவந்தமாக கைப்பற்றினுரா ?

(எ) ஆம் எனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) and (எ) மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியின் இடைக்காலத் தடையுத்தரவு வரும் முன்பே, 11—2—69 அன்று, சப்-கலெக்டரின் உத்தரவு நிறைவேற்றப்பட்டு விட்ட காரணத்தினுல் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியின் உத்தரவை செயல்படுத்த முடியவில்லை.

Blood Donations.

* 269 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) the rate at which donations of blood are being paid for in Government Hospitals ;

(*b*) when this rate was fixed ; and

(*c*) whether this rate of payment is found adequate to attract sufficient quantities of blood donations ?

மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) அரசாங்க மருத்துவ மனைகளில் குருதிக்கொடை வழங்கும் ஒவ்வொருவருக்கும் ரூ. 7 அளிக்கப்படுகிறது.

(இ) இத் தொகை வீதம் 22—8—1957 முதல் செயலில் இருந்து வருகிறது.

(உ) குருதிக்கொடை அளிப்போருக்கு 1957 தொடங்கி 7 ரூபாய் அளிப்பது வழக்கில் இருந்து வருகிறது. இத்தொகையை அதிகரிக்க வேண்டுமென்று எவரும் கேட்டதாகத் தெரியவில்லை. குருதிக் கொடை அளிப்பவர்கள் வழக்கம்போல் உற்சாகத்துடன் குருதியளிக்க முன் வருகின்றனர்.

திரு. டி. சந்தோஷம்: ரூ. 7 கொடுப்பதாகத் தெரிகிறது. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் டி.ஏ. மற்றும் எல்லா வகையிலும் சலுகை உயர்ந்து கொண்டே போகிறது. இது மட்டும் ரூ. 7-லேயே இருந்து வருகிறது. விலைவாசியும் ஜாஸ்தியாயிருக்கிறது. பிரைவேட் ஆஸ்பத்திரிகளில் இதைவிட அதிகமாகக் கொடுக்கிருர்கள். மதுரை கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிகளில் உள்ள கவர்ன்மெண்ட் பிளட் பாங்க்கில் பிளட் இல்லாததால் அநேக ஆபரேஷன்கள் ஒத்திப் போடப்படுகின்றன. இதை அரசாங்கம் கவனத்தில் வைத்து நடவடிக்கை எடுக்குமா ?